## DEPOSITION OF WITNESSES

(Chapter XXII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No. 2 SRIVAIKUNDAM

| | |
|---|---|
| Case No | CC. 93/2018 |
| Deposition of witness for | Prosecution wit. PW.5 |
| Name | ரீகன் |
| Father Name | |
| Village | |
| Taluk | |
| caste | |
| calling | |
| Religion | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 the day 06-01-2023

<u>முதல்விசாரணை</u>

1. நான் தற்போது சென்னை அசோக் நகரில் உள்ள சிலை கடத்தல் தடுப்பு பிரிவில் தலைமைக்காவலராக பணிபுரிந்து வருகிறேன் . நான் கடந்த 04.12.2016 ம் தேதி ஏரல் காவல் நிலையத்தில் முதல் நிலைக்காவலராக பணியாற்றும் போது ஆய்வாளர் கிங்ஸிலி தேவ்ஆனந்த் மற்றும் தலைமைக்காவலர் தர்மர் , சிறப்பு உதவி ஆய்வாளர் இம்மானுவேல் ஜெயசேகர், ஏரல் காவல் நிலைய குற்ற எண் . 345/2016 எதிரி டேவிட் என்ற எட்வர்டை தேடி ரோந்து செல்லும் போது ஆறுமுகமங்களம் பிள்ளையார் கோவில் முன்பு நின்று கொண்டு இருந்தார்.

2. அப்போது போலீஸ் பார்ட்டியாகிய எங்களை கண்டதும் ஓட முயற்சித்தவரை மடக்கி பிடித்து விசாரித்ததில் தான் சுயமாக எந்த வித வற்புறுத்துதலும் இன்றி தானாக முன்வந்து கொடுத்த வாக்குமூலம் தான்

ஏரல் குற்ற வழக்கு எண் .237/2016 வழக்கில் தானும் தன் சகோதரன் சஞ்சயும் சம்மந்தப்பட்டதாக கூறினார்.

3. தான் திருவைகுண்டம் தாலுகா இடையற்காடு என்ற ஊரில்உள்ள குணசிங் என்பவரின்மகன் என்றும் தனக்கு உடன் பிறந்த 6 பேர் இருப்பதாகவும், தனக்கு சரியான வேலை இல்லாததால் தானும் தன் சகோதரர் சஞ்சய் இருவரும் சுயமாக கார் டிராவல்ஸ் நடத்துவதற்கு பணம் தேவைப்பட்டது ஒப்புதல் வாக்குமூலத்தில் என்றும் கூறினார்

3. எதிரி டேவிட்டும் அவரது சகோதரன் சஞ்சயும் சேர்ந்து தனது சொந்த வாகனமான TN 69U1287 என்ற பதிவு எண் கொண்ட வண்டியில் வந்து ஏரல் காந்தி சிலை பஸ்ஸ்டாண்ட் அருகில் நின்று நோட்டமிட்டதில் ஒரு வயதான பெண்மணியின் கழுத்தில் உள்ள 8 பவுண் தங்கசெயினை அவர்களுக்கு தெரியாமல் அறுத்து எடுத்துக்கொண்டு வண்டியில் சென்று விட்டோம் என்று எதிரி டேவிட் தனது ஒப்புதல் வாக்குமூலத்தில் சொன்னார்.

4. அந்த நகையினை மதுரை மாட்டுத்தாவணி பஸ்ஸ்டாண்ட் அருகில் முகம் தெரியாத ஒருவரிடம் ரூ.85000 க்கு விற்றதாகவும், அந்த பணத்தில் ரூ.5000 த்தை செலவழித்து விட்டு மீதி ரூ .80000 த்தை கோயம்புத்தூரில் தள்ளுவண்டியில் வைத்து காய்கறி வியாபாரம் செய்ய முதலீடு செய்ததாகவும் எதிரி டேவிட் தனது ஒப்புதல் வாக்குமூலத்தில் சொன்னார்.

5.அந்த பணமான ரூ. 80000 த்தை முதலீடு செய்ததில் அசல் அப்படியே கிடைத்தாகவும், அந்த ரூ. 80000 த்தை எதிரி சஞ்சய் வீட்டின் முன்புறம் உள்ள வேப்பமரத்தின் அடியில் பச்சைக் கலர் பாலீதின் பையில் வைத்து அதனை மறைத்து வைத்து இருந்ததாகவும் எங்களை அந்த இடத்திற்கு அழைத்து சென்றால் அடையாளம் காண்பிப்பதாகவும் , டேவிட் தனது ஒப்புதல் வாக்குமூலத்தில் சொன்னார்.

5. பிறகு எதிரியை அந்த இடத்திற்கு கூட்டி சென்று அடையாளம் காண்பித்தவுடன் போலீஸ் பார்ட்டி சகிதம் சென்று வழக்கு சொத்தான ரூ . 8000 காவல் ஆய்வாளர் கிங்ஸ்லி தேவ்ஆனந்த் மற்றும் கிராம நிர்வாக அதிகாரி இராமசாமி மற்றும் தலையாரி சுயம்பு ஆகியோர் முன்னிலையில் அத்தாட்சி தயார் செய்து சாட்சிகள் கிராம நிர்வாக அதிகாரி இராமசாமி மற்றும் தலையாரி சுயம்பு முன்னிலையில் வழக்கு சொத்தான ரூ . 80000 த்தை கைப்பற்றினோம் . ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். கையொப்பம் மட்டும் **அ.சா.ஆ. 7** ஆகும்.

6. வழக்கு சொத்தை கைப்பற்றிய பின்பு எதிரியை கைது செய்து நிலையத்திற்கு கொண்டு வந்து வழக்கு பதிவு செய்ய ஆய்வாளருக்கு உதவியாக இருந்தேன். எதிரிகளை எனக்கு அடையாளம் தெரியும். சாட்சி திறந்த நீதிமன்றத்தில் ஆஜர் எதிரியை டேவிட் என்று அடையாளம் காட்டினார். இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார். மற்றொரு எதிரி நீதிமன்றத்தில் ஆஜர் இல்லை . அவருடைய வருகையின்மையால் அடையாளம் குறித்து ஆட்சேபனை செய்யமாட்டேன் என்று மனு வாயிலாக தெரிவிக்கப்பட்டது போலீசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்குவிசாரணைவேண்டுகோளுக்கு இணங்க ஒத்திவைக்கப்பட்டது.

சாட்சி சொல்லியதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் வாசித்து காண்பிக்கப்பட்டு அவர் சரியென ஒப்புக்கொள்ளப்பட்ட பின் கையொப்பம் பெறப்பட்டது.

ஒப்பம் /-
திரு. தே.மயில்சாமி.,
நீதித்துறை நடுவர் எண்.2,
திருவைகுண்ட